

# ‘ அவர்கள் விவசாயிகளன்றி வேறு யார்? ’

## இலங்கையில் பெண் விவசாயிகளின் ஆற்றலைப் பாதிக்கும் ஐந்து பிரதான தடைகள்

## நிலவுகின்ற பால்நிலை ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதற்காக இலக்குவைக்கப்பட்ட நடைமுறைப் பரிந்துரைகள்

ரஸ்மினி த சில்வா

அக்டோபர், 2020

LAW & SOCIETY TRUST

WE EFFECT

இலங்கையின் விவசாயத் துறையில் பெண்கள் இன்றியமையாத வகிபாத்திரத்தினை வகித்துவருகின்றனர். இருப்பினும் இப்பெண்களின் பங்களிப்பு தேசிய கொள்கைச் சட்டகங்களில் அங்கீகரிக்கப்படுவதுமில்லை அல்லது பிரதிபலிக்கப்படுவதுமில்லை. உணவு உற்பத்திக்குப் பெண்கள் அளிக்கும் பங்களிப்பு இன்றியமையாததாகும். இலங்கையில் பெண் விவசாயிகள் பல்வேறு தடைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இத்தடைகளினால் உணவு முறைமை மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்காகத் தமது பூரண ஆற்றலை இப்பெண்கள் பயன்படுத்துவது தடைப்படுகின்றது. பெண்கள் உள்நாட்டுப் பொருளாதாரத் துறைக்குப் பங்களிப்பு வழங்குகின்ற போதிலும் அவர்கள் விவசாயிகளாகக் கருதப்படுகின்றனரா இல்லையா என்கின்ற குழப்பத்திற்கு பால்நிலை ஏற்றத்தாழ்வுமிக்க கொள்கைகளாலும் நடைமுறைகளாலும் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் கள யதார்த்தங்கள் இட்டுச்செல்கின்றன. பெண் விவசாயிகள் எதிர்நோக்கும் ஐந்து பிரதான தடைகளை இந்த ஆய்வுக் கட்டுரை கோடிட்டுக் காட்டுகின்றது: 1. இயற்கை வளங்கள் மீது அணுகலும் கட்டுப்பாடும் இல்லாமைஇ 2. சந்தைகளை அணுக முடியாமைஇ 3. நிதிச் சேவைகளை அணுக முடியாமைஇ 4. தொழில்நுட்பத்தினை அணுக முடியாமைஇ 5. பராமரிப்புப் பொறுப்புக்கள்

### பிரதான பரிந்துரைகள்:

- விசேடமாக, காணிக்கான பெண்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற பால்நிலைப் பாகுபாடுமிக்க சட்ட, கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறைகளைத் திருத்துதல்.
- அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிச் சேவைகளுக்கான தகைமையினைப் பெறுவதற்குக் காணி உரித்தாண்மை முன்தேவைப்பாடாக இருக்கின்ற விவசாய விரிவாக்கச் சேவைகளை வழங்குவதற்கான நிபந்தனைகளை மறுசீரமைத்தல்.
- பெண் விவசாயிகளின் தொழில் முயற்சியாண்மைத் திறன்களின் ஆற்றலை அதிகரிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கி விவசாய விரிவாக்கச் சேவைகளில் இருந்து உதவிகளை அமுலாக்கல்.
- பெண் விவசாயிகளை இலக்குவைத்து போக்குவரத்து வசதிகள் மற்றும் சந்தை வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பினை நிர்மாணித்தல்.
- விவசாயிகளின் சமுதாயத்தில் தலைவர்களாகவும் தொழில்முயற்சியாளர்களாகவும் தீர்மானம் வகுப்பவர்களாகவும் சந்தை முறைமைகளில் பங்கீடுபாட்டாளர்களாகவும் ஆற்றல்மிக்க கொள்வனவாளர்களாகவும் பெண் விவசாயிகளைச் சித்தரிப்பதற்கான பிரச்சாரத்தினை முன்னெடுத்தல்.
- குறிப்பாகப் பெண் விவசாயிகளை இலக்குவைத்து நீண்ட கால மீள்கொடுப்பனவுக் காலப்பகுதிகளுடன் குறைந்த வட்டியுடனான கடன் திட்டங்களை உருவாக்கல்.

- சகல தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கட்டாயத் தேவைப்பாடாகப் பெண் விவசாயிகளின் சமமான பங்கேற்பு குறித்துரைக்கப்படவேண்டும். ‘
- ஆண்களின் வேலைகள் மற்றும் பெண்களின் வேலைகள் தொடர்பாகக் காணப்படும் அங்கீகரிக்க முடியாத சமூக விதிகள் பற்றி விவசாயச் சமுதாயங்களையும் விவசாயப் போதனாசிரியர்களையும் தெளிவுபடுத்தல்.
- பெண் விவசாயிகள் பயன்படுத்துவதற்கென இலகுவான தொழில்நுட்பத் திட்டங்களின் அறிமுகப்படுத்தல்.
- விவசாயப் பெண்கள் மத்தியிலான பராமரிப்புப் பணிகளை அங்கீகரித்து மீள்விநியோகம் செய்வதை மேம்படுத்துவதற்காக அரசாங்கப் பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் அபிவிருத்தி முகவர்கள் மத்தியில் கொள்கைக் கலந்துரையாடல்களை உருவாக்கல்.

ழஇந்த ஆய்வுக் கட்டுரையில் தொடர்ந்து வரும் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தடையின் கீழும் மேலதிகப் பரிந்துரைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

# அறிமுகம்

இலங்கையின் விவசாயத் துறையில் பெண்கள் இன்றியமையாத வகிபாத்திரத்தினை வகித்துவருகின்றனர். இருப்பினும் இப்பெண்களின் பங்களிப்பு தேசிய கொள்கைச் சட்டகங்களில் அங்கீகரிக்கப்படுவதுமில்லை அல்லது பிரதிபலிக்கப்படுவதுமில்லை. உணவு உற்பத்தியிலும் உணவுப் பாதுகாப்புத் தொடர்பிலும் பெண்கள் வழங்கிவரும் பங்களிப்பு இன்றியமையாததாகும். உலகில் வளர்க்கப்படும் உணவில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமானவற்றினை உற்பத்திசெய்யும் பொறுப்பினைத் தெற்காசிய நாடுகளினதும் சகாரா பாலைவனத்திற்குத் தெற்கேயுள்ள ஆபிரிக்கக் கண்ட நாடுகளினதும் பெண்கள் கொண்டுள்ளனர் (உணவு மற்றும் விவசாய அமைப்பு 2011). எவ்வாறாயினும், இலங்கை உள்ளடங்கலாக உலகம் முழுவதும் உள்ள பெண் விவசாயிகள் உணவு முறைமைகளை வலுப்படுத்துவதற்கும் அவர்களின் குடும்பங்களிலும் சமுதாயங்களிலும் நாடுகளிலும் உணவுப் பாதுகாப்பினைப் பற்றிப்பிடிக்கவும் தமது பூரண ஆற்றலைப் பயன்படுத்துவதில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற அல்லது பூரண ஆற்றலைத் தடுக்கின்ற எண்ணற்ற தடைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

பெண் விவசாயிகள் முகங்கொடுக்கின்ற சமத்துவமின்மைகளின் சிக்கலான குறுக்கு வெட்டு அம்சங்கள் ஒன்றையொன்றுத் தழுவுகின்ற பல்வேறு அடையாளங்களையும் தடைகளையும் குறித்துரைக்கின்றன. இவை சமூக - கலாசார மற்றும் அரசியல் துறைகளில் பெரிதும் தீர்க்கப்படாமலேயே விடப்படுகின்றன. இயற்கை வளங்கள், சந்தைகள், நிதிச் சேவைகள், தொழில்நுட்பம் மற்றும் பராமரிப்புப் பொறுப்புக்கள் ஆகியவற்றின் மீதான அணுகல் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான அவ்வாறான 5 தடைகளை இந்த ஆய்வுக் கட்டுரை அடையாளம் காண்கின்றது. பேரண்ட மட்டத்திலே அரசாங்கச் செலவீனத்திலே பெண் விவசாயிகள் அங்கீகரிக்கப்படுவதுமில்லை

அல்லது அவர்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்கப்படுவதுமில்லை. எனவே அவர்கள் இரண்டு மட்டத்திலே விலக்கிவைப்புக்கு முகங்கொடுக்கின்றனர் - பெண்களாகவும் சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களாகவும் விலக்கிவைக்கப்படுகின்றனர் (ஒக்ஸ்பாம்இ 2017).

இலங்கையில் பொருளாதாரம் விஸ்தீரணமடைந்துள்ள போதிலும் 2001 ஆம் ஆண்டில் 41 சத விகிதமாகக் காணப்பட்ட பெண் ஊழியப் படையின் பங்கேற்பு (குடுகுP) 36 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்துள்ளது (உலக வங்கி). தொடர்ந்து நிலவிவரும் பால்நிலைப் பாகுபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள பெண் விவசாயிகளின் கள யதார்த்தங்களுக்கான பரந்த வீச்சிலான காரணங்களுள் ஆண்களை விடப் பெண்களுக்கு விகிதாசாரமற்ற முறையில் அதிக சுமையினை ஏற்படுத்தும் பராமரிப்புப் பொறுப்புக்கள், பெண்களின் நடமாட்டமின்மைகள் (சமூகத் தடைகள் காரணமாக)இ சில குறிப்பிட்ட தொழில்நுட்பத் திறன்களைப் பெண்கள் பெறுவதில் இருந்தும் பெண்களைத் தடுக்கின்ற பொருளாதார வகிபாத்திரங்களில் உள்ள, வளங்களை அணுகுவதில் உள்ள மற்றும் தீர்மானம் வகுப்பதில் ஈடுபடுவதிலுள்ள பால்நிலை அடிப்படையிலான பக்கச்சார்புகள் ஆகியவை அடங்குகின்றன.

பொதுவாக திறன்சாரா ஊழியத்தில் ஈடுபடவேண்டும் என எதிர்பார்க்கப்படும் பெண்கள் இலங்கையில் விவசாயத் துறையில் பல்வேறு வகிபாத்திரங்களையும் வகித்து வருகின்றனர். ஆண்கள் கிராமங்களில் இருந்து நகரங்களுக்குப் புலம்பெயர்வது அதிகரித்து வருகின்ற காரணத்தினால் கிராமங்களில் விடுபட்டுள்ள பெண்களே விவசாய நடவடிக்கைகளில் அதிக பொறுப்புக்களைச் சுமக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உள்நாட்டுச் சூழமைவில் விவசாயத்தினைப் பெண்ணியமாக்கும் போக்கு பால்நிலைப் பாகுபாடுமிகு நடைமுறைகள் மற்றும் சமத்துவமின்மைகளுடன் சேர்ந்தே காணப்படுகின்றன. இந்த ஊழியப் பிரிப்பிலே தங்களின் உற்பத்தித்திறன்மிக்க வகிபாத்திரங்களைப் பெண் விவசாயிகள் வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் நிறைவேற்றுவதை இது தடுக்கின்றது. இலங்கையில் பெண் விவசாயிகளைப் பாதிக்கும் 5 பிரதான தடைகளை எதிர்ப்பதற்கான பரிந்துரைகளை இந்த ஆய்வு வழங்குகின்றது.

**இலங்கையில் பெண் விவசாயிகளுக்கு முட்டுக்கட்டையிடுபவை எனப் பிரதான-மாக அடையாளம் காணப்பட்ட தடைகள்:**

- இயற்கை வளங்களை அணுக முடியாமை மற்றும் அவற்றின் மீது கட்டுப்பாடு இல்லாமை
- சந்தைகளை அணுக முடியாமை
- நிதிச் சேவைகளை அணுக முடியாமை
- தொழில்நுட்பத்தினை அணுக முடியாமை
- பராமரிப்புப் பொறுப்புக்கள்

# 01. இயற்கை வளங்களின் மீதான அணுகலும் கட்டுப்பாடும்

வளர்முக நாடுகளில் 60மூ - 80மூ உணவு உற்பத்திக்கான பொறுப்பினைப் பெண் விவசாயிகளே கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் இப்பெண்கள் 2மூ மான காணிகளை மட்டுமே சொந்தமாகக் கொண்டுள்ளனர். (ஒக்ஸ்பாம்). விவசாயத்திலே பால்நிலை ஏற்றத்தாழ்வுகள், குறிப்பாக இயற்கை வளங்களின் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் அணுகல் தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் பாரிய அளவில் காணப்படுகின்றன. இலங்கையில் காணியின்மை அல்லது காணிகளை அணுக முடியாமை பெண்கள் விவசாயத்தில் ஈடுபடுவதை மாத்திரம் தடுக்காமல் பெறுமதிச் சங்கிலியில் திறனற்ற தொழிலாளர்கள் மற்றும் பிரதான உற்பத்தியாளர்கள் என்கின்ற ரீதியில் அவர்களின் வகிபாத்திரங்களையும் முடக்குகின்றன. காணியினை அணுகல் மற்றும் காணி உரித்தாண்மை ஆகியவை விவசாயியாக அங்கீகரிக்கப்படுவதற்குப் பங்களிப்பு வழங்கும் காரணிகளாகவும் உள்ளன. காணி உரித்தாண்மை இல்லாத காரணத்தினால் கொள்கையிலும் நடைமுறையிலும் பெண் விவசாயிகள் எதிர்நோக்கும் விலக்கிவைப்பின் காரணமாக அவர்கள் நீரினைப் பெற்றுக்கொள்வதிலும் நிதிச் சேவைகள், சந்தைகள் மற்றும் விரிவாக்கச் சேவைகள் ஆகியவற்றினைப் பெற்றுக்கொள்வதிலும் பல தடைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இலங்கையில் 16மூ மான பெண்கள் மாத்திரமே தனிப்பட்ட காணிகளைச் சொந்தமாகக் கொண்டுள்ளனர். ஆண்களைப் போலன்றி விவசாயச் சொத்துக்களையும் சேவைகளையும் பெண் விவசாயிகள் பெற்றுக்கொள்வதைக் காணி உரித்தாண்மை இல்லாமை எந்த அளவிற்குத் தடுக்கின்றது என்பதைக் கள யதார்த்தங்கள் எடுத்துக் காட்டுகின்றன (தொகை மதிப்பீடு புள்ளிவிபரத் திணைக்களம் 2002). காணிகளை அணுக முடியாவிட்டாலும் பெண்கள் தொடர்ந்தும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். ஆனால் சீவனோபாய விவசாயத்தின் நலிந்த ஆற்றல் மட்டங்களில் அல்லது பண்ணைகளில் நாட்கூலிகளாக இவர்கள் வேலை செய்துவருகின்றனர். மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் மிகக் குறைந்த வருமானத்தினை வழங்கிவருவதுடன் பொதுவாகப் பருவகாலச் செயற்பாடுகளாகவும் கிரமமற்றவையாகவும் இருந்து வருகின்றன.

காணி உரித்தாண்மை என வரும்போது பால்நிலை ஏற்றத்தாழ்வு நிலவுவதற்கான காரணம் தற்போது அமுலில் இருக்கும் பழமையானதும் காலங்கடந்ததுமான பாகுபாடுமிகு சட்டங்களும் ஒழுங்குவிதிகளுமாகும். காணி உரித்தாண்மையில் சமத்துவமின்மை நிலவுவதை சுதேசிய சட்டங்களிலும் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திலும் சான்றாகக் காணலாம் (டுனுழு). காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணை பெண் வாரிசினை விட ஆண் வாரிசுக்கே முன்னுரிமை வழங்குகின்றது. ஆண்களுக்குப் பரிவு காட்டும் வாரிசுரிமையின் தொடர்ச்சியினை, குறிப்பாகக் குடும்பத்தின் இளைய ஆண் பிள்ளைக்குப் பரிவு காட்டும் வழமையினைக் கிராமியப் பெண்களின் காணி உரித்தாண்மைக்கான பாரதூரமான தடையாகக் கருதமுடியும். இதேபோன்று, கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டங்களில் உள்ள சில கூறுகள் தீர்மானம் வகுக்கும் வகிபாத்திரம் மற்றும் காணிச் சொத்துக்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றினை ஆண்களுக்கு வழங்குகின்றன. இந்தப் போக்கினை நகரப் பிரதேசங்களில் மிகப் பரவலாகக் காண முடியாவிட்டாலும் கிராமிய விவசாயச் சமுதாயங்கள் மேற்குறிப்பிட்ட பாரம்பரியச் சட்டங்களுக்கு இறுக்கமாக இயைபுறுகின்றன. பெண் விவசாயிகள் பூரணமாகச் செயற்படுவதற்கான அவர்களின் ஆற்றலை இது மேலும் குறைக்கின்றது.

கடன் வழங்குகையில் பிணையுறுதியாகக் காணிகளை வைக்கவேண்டும் எனப் பொதுவாக வங்கிகள் தேவைப்படுத்துகின்றன. இதனால் முறைசார் கடன் திட்டங்கள் மற்றும் நிதிச் சேவைகளை அணுகமுடியாமல் பெண் விவசாயிகள் அல்லல்படுகின்றனர். காணி உரித்தாண்மை இல்லாத காரணத்தினால் நாட்டிலுள்ள பெண் விவசாயிகள் ஒழுங்கமைக்கப்படாத நுண் நிதி நிறுவனங்களிடமிருந்து உயர் வட்டி வீதங்களுக்குக் கடன் பெறும் பாதிப்புறுநிலைக்கு ஆளாகியுள்ளதுடன் இந்நிறுவனங்களை எளிதில் நம்பி ஏமாறுகின்றவர்களாகவும் ஆகியுள்ளனர்.

காணி உரித்தாண்மை இல்லாததன் விளைவானது இலங்கையின் பெண் விவசாயிகள் மீது தொடரான பாதிப்புக்களை ஏற்படுத்திவருகின்றது. காணி உரித்தில்லாத காரணத்தினால் அரசாங்கத்தினால் நடத்தப்படும் கமநல சேவை நிலையங்களில் பதிவுசெய்வதற்குப் பெண் விவசாயிகள் அனுமதிக்கப்படுவதில்லை. அரசாங்க முறைமையில் பதிவுசெய்வதற்கும் விரிவாக்கல் சேவைகளைப் பெறுவதற்கும் சந்தைத் தகவல்களைப் பெறுவதற்கும் பயிற்சியினைப் பெறுவதற்கும் மானியங்களைப் பெறுவதற்கும் விவசாயிகளுக்கான அமைப்புக்களில் உறுப்பாண்மையினைப் பெறுவதற்கான தகுதயினைப் பெறுவதற்கும் காணி உரித்தினைக் கொண்டிருப்பது ஒரு முன் தேவைப்பாடாக உள்ளது. காணிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற விவசாயிகளை மாத்திரமே நீர்ப்பாசன அமைப்புக்கள் ஏற்றுக்கொள்கின்றன. காணியற்ற ஒரு கிராமத்துப் பெண் விவசாய நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நீர்ப்பாசனத் திட்டங்களை அணுகுவதில் இருந்தும் இது அவரைத் தடைசெய்கின்றது (குயுழுஇ 2018). விவசாயிகள் அமைப்புக்களிலும் நீர்ப்பாசன அமைப்புக்களிலும் உறுப்பாண்மை இல்லாமையானது பெண்கள் தங்கள் கரிசணைகளை எழுப்புவதற்கான சகல வாய்ப்புக்களையும் அகற்றுவதுடன் ஒரு விவசாயி என்கின்ற ரீதியில் அவர்கள் அடையாளத்தினையும் அங்கீகாரத்தினையும் பெறுவதையும் தடைசெய்கின்றது.

**பரிந்துரைகள்:**

- பெண் ஒருவரின் காணிக்கான உரிமையினைக் குறிப்பாகப் பாதிக்கும் பால்நிலை ரீதியாகப் பாகுபாடுமிக்க சட்ட, கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறைகளைத் திருத்தல்.
- அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிச் சேவைகளுக்கான தகுதியினைப் பெறுவதற்குக் காணி உரித்தாண்மை ஒரு முன்தேவைப்பாடாக இருக்கும் விவசாய விரிவாக்கல் சேவைகளின் நிபந்தனைகளை மறுசீரமைத்தல்.
- காணி உரித்தாண்மை பெண்களுக்குக் கட்டாயமல்லாததாக இருக்கின்ற விவசாய அமைப்புக்களுக்கும் நீர்ப்பாசன அமைப்புக்களுக்கும் உறுப்பாண்மையினை வழங்கும் வகையில் பொறிமுறையினை மாற்றல்.
- முனைப்பான சந்தைப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்காகக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் மூலம் காணியினை வழங்குகையில் பெண் விவசாயிகளை முன்னுரிமைப்படுத்தல்.

- காணி உரித்தாண்மை தொடர்பாகவும் நீர்ப்பாசனத் திட்டங்களை அணுகுதல் தொடர்பாகவும் பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் முரண்பாடுகளைத் தீர்ப்பதனை அமைச்சு மட்டம் முதல் மாவட்ட மற்றும் பிரதேச மட்டம் வரையிலான அரசாங்க அதிகாரிகள் முன்னுரிமைப்படுத்தவேண்டும்.
- காணியினைச் சொந்தமாகக் கொண்டிராத பெண் விவசாயிகளையும் விவசாயிகளாகக் கருதி அரசாங்கம் வழங்கும் அதே சேவைகளைப் பெற அவர்கள் உரித்துடையவர்களாகுவதை மேம்படுத்தும் ஒரு பகிரங்கக் கொள்கைச் சொல்லாடலை உருவாக்கல்

## 02. சந்தைகளை அணுகல்

இலங்கையில் பொருளாதார ரீதியாக முனைப்பாகவுள்ள மக்கள் தொகையில் பெண்களின் சதவிகிதம் வெறும் 34.3மூ மட்டுமே ஆகும். தொழில்வாய்ப்புப் பெற்றுள்ள இப்பெண்கள் குழுவின் மத்தியில் சுமார் 27.7மூ மானவர்கள் விவசாயத் துறையில் பணியாற்றுகின்றனர் (தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்இ 2020). இப்பெண்களில் பெரும்பான்மையானோர் சீவனோபாயப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவருவதுடன் வர்த்தக மட்டத்திலான விவசாயத்தில் நுழைவதிலும் பெறுமதிச் சங்கிலியில் உயர் மட்டங்களை அணுகுவதிலும் சந்தைகளுக்கான ஒட்டுமொத்த அணுகலைப் பெறுவதிலும் எண்ணற்ற தடைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இந்தக் கொள்கைச் சுருக்கம் தொடர்ந்து கோடிட்டுக் காட்டுவதுபோல், பாகுபாடுமிகு பால்நிலைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் சேர்த்து பாரம்பரிய பால்நிலை வகிபாத்திரங்கள் தொடர்பாக நிலவும் சமூக விதிகள் பெண் விவசாயி ஒருவர் வியாபாரத்தில் ஈடுபட்டு சந்தைப் பொருளாதாரத்தில் தனது இருப்பினை நிலைநாட்டுவதில் இருந்தும் அவரைத் தடுக்கின்றன. பெண் ஒருவர் சந்தைகளைப் பௌதிக ரீதியாக அணுகி சந்தை வாய்ப்புக்களை மதிப்பிடுவதில் பிரதான தீர்மானமிகு காரணியாகப் பெண்களின் அசைவியக்கம் எனும் விடயம் அடையாளம் காணப்பட்டுள்ளது. பெண் விவசாயி ஒருவரின் அசைவியக்கத்தின் மட்டத்தினைத் தடுக்கும் பிரதான காரணி வீட்டு வேலைகள் போன்ற அவரின் பராமரிப்புப் பொறுப்புக்களாகும். உரிய போக்குவரத்து வசதிகளும் உட்கட்டமைப்பு வசதிகளும் இல்லாமையானது பெண் விவசாயிகள் சந்தை முறைமைகளை அணுகி விவசாயிகளின் அமைப்புக்களிலும் கூட்டுறவுகளிலும் பங்குபற்றுவதற்குத் தடையாக இருந்து வருகின்றது. மேற்குறிப்பிட்ட வகையிலான பெண் உற்பத்தியாளர் குழுக்களுடன் ஈடுபாடு இல்லாமையானது சந்தைக் கேள்விகள், சந்தை முறைமைகள் பற்றிய தகவல்களுக்கான அணுகலையும் வர்த்தக ஈடுபாட்டிற்கான வாய்ப்புக்களையும் மேலும் குறைக்கின்றது.

பெண் விவசாயிகள் சீவனோபாய மட்டத்தில் இருந்து உற்பத்தியின் வர்த்தக மட்டங்களுக்குத் தங்களின் விவசாய ஈடுபாட்டினைத் தரமுயர்த்தி இறுதியில் பெறுமதிச் சங்கிலியில் மேலே நகர்வதற்கு, ஒப்பீட்டளவில் குறைந்த அளவான சந்தை இணைப்புக்களையும் நிதி வளங்களையுமே கொண்டுள்ளனர். சந்தைத் தகவல்களைப் பெறல், சந்தைகளை அடையாளம் காணல், தீர்மானம் வகுத்தல், பேரம் பேசல் மற்றும் ஒட்டுமொத்தச் சந்தைப் பொருளாதாரத்தில் பேச்சுவார்த்தை நடத்தல் ஆகியவை ஆண்களின் பணிகளாகவே புலனுணரப்படுகின்றன. மேலும் பெறுமதிச் சங்கிலியில் அடிப்படை உற்பத்தியாளர் என்ற நிலையில் இருந்து உயர் மட்டங்களுக்கு நகர்வதற்குப் பெண் விவசாயினை இயலுமாக்குகின்ற விசேட சந்தைச் சான்றுப்படுத்தல்களுடன் தொடர்புடைய தகவல்களையும் சேவைகளையும் அணுகுவதற்கான வாய்ப்பினைப் பெண்கள் அரிதாகவே கொண்டுள்ளனர்.

## பரிந்துரைகள்

- பெண் விவசாயிகளின் தொழில்முயற்சியாண்மைத் திறன்களின் இயலளவை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கல் மற்றும் விவசாய விரிவாக்கச் சேவைகளில் இருந்து உதவிகளை அமுல்படுத்தல்.
- சந்தை முறைமைகள், சந்தைக் கேள்விகள், உற்பத்தி மற்றும் சில்லறை வியாபார வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களைப் பெண் விவசாயிகளுக்குப் பரப்பி இற்றைப்படுத்துவதற்கானப் பொறிமுறைகளை உருவாக்கல். இவற்றினையும் விரிவாக்கச் சேவைகள், விவசாய அதிகாரிகள் மற்றும் விவசாயக் கூட்டுறவுகள் மூலம் மேற்கொள்ள முடியும்.
- பெண் விவசாயிகளை இலக்குவைத்து போக்குவரத்து வசதிகள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்புக்களை உருவாக்கல்
- பெண் விவசாயிகளினால் உருவாக்கப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களுக்காகப் பெறுமதி சேர்க்கையினையும் சந்தை அடையாளத்தினையும் உருவாக்கல்.
- விவசாயிகள் சமுதாயங்களில் பெண் விவசாயிகளைத் தலைவர்களாகவும் தொழில்முயற்சியாளர்களாகவும் தீர்மானம் வகுப்பவர்களாகவும் சித்தரிக்கின்ற மேலும் சந்தை முறைமைகளில் பங்கீடுபாட்டாளர்களாகவும் வாய்ப்புள்ள கொள்வனவாளர்களாகவும் சித்தரிக்கின்ற பிரச்சாரங்களை முன்னெடுத்தல்.
- பெண் விவசாயிகளைக் குறிப்பாக இலக்குவைத்து சந்தை இணைப்புக்களை உருவாக்கல் (வர்த்தகச் சந்தைகள்)

# 03. நிதிச் சேவைகளுக்கான அணுகல்

பெண் விவசாயிகள் சீவனோபாயப் பயிர்ச்செய்கையில் இருந்து விவசாயத்தின் வர்த்தக மட்டங்களுக்கு முன்னேறுவதைத் தடுக்கும் பிரதானத் தடைக்கல்லாக நிதிச் சேவைகளை அணுக முடியாமல் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. கடன் வசதிகளையும் நிதி முதலீடுகளையும் சேமிப்புப் பொறிமுறைகளையும் கிராமியப் பெண்கள், குறிப்பாகப் பெண் விவசாயிகள் பெறுவதற்கு அவர்களை இயலுமாக்குகின்ற ஒழுங்கமைக்கப்பட்ட நிதிச் சேவைகள் அவர்களுக்கு அரிதாகவே கிடைக்கின்றன.

எவ்வாறாயினும், கிராமிய விவசாய சமுதாயங்களில் ஒழுங்கமைக்கப்படாத நுண் நிதிக் கம்பனிகள் அதிகளவில் காணப்படுகின்றன என்பதுடன் கிராமத்துப் பெண்களைச் சுரண்டுதல் மற்றும் அவர்களைத் தங்களின் இலாபத்திற்காகப் பயன்படுத்தல் போன்ற காரணங்களுக்காக இந்த நுண் நிதிக் கம்பனிகள் தொடர்சியாக விமர்சிக்கப்பட்டு வருகின்றன. இலங்கை சனத்தொகையில் 45 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் நாளொன்றிற்கு 5 அமெரிக்க டொலருக்கும் குறைந்த வருமானத்திலேயே வாழ்ந்து வருகின்றனர் (உலக வங்கி 2017). பொதுவாக இந்த வகையினுள் வருகின்ற விவசாயிகள் வங்கிகள் வழங்கும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதை இரண்டு பிரதான காரணங்கள் தடுக்கின்றன: கடன்களுக்குப் பிணையுறுதியாக எவற்றினையும் வழங்க முடியாமை மற்றும் உத்தரவாதப்படுத்துனர்களைப் பெற முடியாமை. அதிகமான சந்தர்ப்பங்களில் கடன் மீள் தவணைக் கொடுப்பனவுகள் நுண் நிதிக் கம்பனிகளினால் வாராந்த அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. சந்தைகளை அணுகுதல் உள்ளிட்ட பல்வேறு தடைகளுக்குப் பெண் விவசாயிகள் ஏற்கனவே முகங்கொடுத்து வரும் தற்போதைய உள்நாட்டுச் சூழமைவில் வாராந்த அடிப்படையில் திட்டமிடப்படும் கடன் மீள்கொடுப்பனவுகள் இப்பெண்களின் நிதி ஆற்றலை மேலும் பலவீனப்படுத்துகின்றன என்பதே உண்மையாகும்.

பெண் விவசாயி ஒருவரினால் கடனை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்படுகையில் இன்னுமொரு கடனைப் பெற்றுக்கொள்ளுமாறு நுண் நிதிக் கம்பனிகள் அவரை வற்புறுத்துவதை வழமையாகக் கொண்டுள்ளன. இதனால் அப்பெண் தன்னை அழிக்கும் மேலதிக் கடன் பொறிக்குள்ளே அகப்படும் நிலை ஏற்படுகின்றது. மேலும் கடன் மீள்கொடுப்பனவுகளுக்கான தவணை தவறுகையில் அக்கடனினை வசூலிப்பவர்கள் பெண்களைப் பல்வேறு வடிவிலான வாய்மொழி மூலமான, உடல் மூலமான மற்றும் பாலியல் ரீதியான வன்முறைகளுக்கு ஆளாக்கும் முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

நுண் நிதிக் கம்பனிகளின் இந்த இயக்கக் கட்டமைப்பு உற்பத்தித்திறன் மிக்க விவசாய ஊழியத்தில் ஈடுபடுவதற்கான பெண்களின் ஆற்றலை மேலும் முடக்குகின்றது. உயர் வட்டி கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதற்காகப் பெண்கள் விவசாயத்தில் இருந்து பூரணமாக விலகி வெவ்வேறு வடிவிலான நாட்கூலி வேலைகளில் ஈடுபட்டுவரும் சம்பவங்களைக் கள மட்ட ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

பெண் விவசாயிகள் இந்தக் கடன் சேவைகளைப் பெறுவதற்காகப் பொதுவாக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுகின்றனர். ஆனால் உடன்படிக்கைகள் ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளதால் அவற்றின் உள்ளடக்கம் பற்றி எதுவுமே அறியாதவர்களாகவே இப்பெண்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுகின்றனர். வங்கி ஒன்றில் இருந்து கடனினைப் பெறுவதற்கான தெரிவு பொதுவாகப் புறக்கணிக்கப்படுவதற்கான காரணம் வங்கிகள் கடனினை வழங்குவதற்குப் பிணையுறுதிகளையும் உத்தரவாதப்படுத்துனர்களையும் தேவைப்படுத்துகின்றமையும் கடன் விண்ணப்பத்தினைச் செயன்முறைப்படுத்த நீண்ட காலத்தினை எடுக்கின்றமையும் கடனினை மீளச் செலுத்துவதற்கான விண்ணப்பதாரரின் ஆற்றலிலேயே கடன் வழங்குவது தங்கியுள்ளமையும் ஆகும். மேற்குறிப்பிட்ட தெரிவடிப்படைகள் ஏற்கனவே பல்வேறு பொருளாதார மற்றும் சமூகச் சிரமங்களினால் அல்லாடிக்கொண்டிருக்கும் பெண் விவசாயிகளுக்குச் சாதகமானவையாக இல்லை என்பதே உண்மையாகும். கிடைக்கக்கூடியதாக உள்ள கடன் திட்டங்கள் பற்றிய தெளிவின்மையும், கிடைக்கக்கூடியதாக உள்ள நிதிச் சேவைத் தெரிவுகள் பற்றிய தெளிவின்மையும், பிணையுறுதிகள் போதிய அளவு இல்லாமையும் வருமான ஸ்திரமின்மையும் பெண் விவசாயிகள் நம்பத்தகுந்த நிதிச் சேவைகளை அணுகுவதைத் தடைசெய்கின்றன. இப்பெண்கள் வர்த்தக விவசாய நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபடுவதையும் சந்தை முறைமைகளுடன் இணைவதையும் இது பாதிக்கின்றது

## பரிந்துரைகள்

- நுண் நிதிக் கம்பனிகளுக்கென இறுக்கமான ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறையினை அமுல்படுத்தல்.
- கடன் வசதிகள் வழங்கப்படுகையில் சந்தைகள் பற்றிய மற்றும் பெறுமதி சேர்க்கை பற்றிய உதவித் தகவல்களையும் சேவைகளையும் வழங்கல்.
- குறிப்பாகப் பெண் விவசாயிகளை இலக்குவைத்து, நீண்டகால மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியுடன், குறைந்த வட்டியுடனான கடன் திட்டங்களை கூட்டுத்தாபன பொறிமுறைகளின் அடிப்படையில் உருவாக்கல்.
- பெண் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள கடன் மற்றும் கடன் வசதிகள் பற்றிய தகவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்வதை இயலுமாக்கல்.
- கடன் சேவைகளைப் பெறுவதற்கான முன்தேவைப்பாடாக வழங்கப்படவேண்டிய பிணையுறுதியின் தன்மையினை மாற்றல்.

## 04. தொழில்நுட்பத்திற்கான அணுகல்

உலகளாவிய ரீதியில், ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண் விவசாயிகளின் உற்பத்தித்திறன் குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் 20மூ - 30மூ பால்நிலை விளைவு இடைவெளி உருவாகின்றது. இப்பால்நிலை இடைவெளியின் பின்னால் உள்ள பிரதான காரணிகள் போதிய அளவு தீர்க்கப்பட்டால் சுமார் 36 மில்லியன் மக்களைப் பட்டினியில் இருந்து மீட்க முடியும்(ஐகுயுனுஇ 2014). தொழில்நுட்பத்தினைப் பெண் விவசாயி ஒருவரினால் அணுக முடியாமல் இருப்பது விவசாய உற்பத்தித்திறனில் அப்பெண்ணின் உச்சபட்சப் பயன்பாட்டினைத் தடுக்கின்ற பிரதான தடையாகக் கருதப்படுகின்றது.

பால்நிலைப் பாகுபாடுமிகு சமூக விதிகளின் காரணமாக இலங்கையில் பெண் விவசாயிகள் தொடர்பில் தொழில்நுட்ப அறிவு மற்றும் கருவிகளின் விநியோகத்தில் ஒப்புரவின்மை தெளிவாகக் காணப்படுகின்றது. ஆண் விவசாயிகளுடன் ஒப்பிடுகையில் பெண் விவசாயிகள் பண்ணை உபகரணங்களை அரிதாகவே பெற்றுக்கொள்கின்றனர். மொத்தத்தில் குறைவான கருவிகளையே இப்பெண்கள் சொந்தமாகக் கொண்டுள்ளனர் என்பதைக் களத்தில் காணப்படும் கதைகளும் கள மட்டத்தில் கண்டறியப்பட்டவையும் உறுதியாகச் சுட்டிக்காட்டுகின்றன. இதனால் நாட்டின் பெண் விவசாய ஊழியப் படை திறனற்ற ஊழியத்தில் பிரதானமாக ஈடுபட்டு வரும் நிலை உருவாகியுள்ளதுடன் அதிகமான சந்தர்ப்பங்களில் இப்பெண் ஊழியப் படையினர் அதீத ஊழியத்தினையும் அதிக நேரத்தினையும் தேவைப்படுத்தும் ஊழியத்தில் ஈடுபட்டுவருவதுடன் பிரதான உற்பத்தியாளர்களாக உணவுப் பெறுமதிச் சங்கிலிகளில் பெரும்பாலும் கீழ் மட்டங்களிலேயே காணப்படுகின்றனர்.

பெண் விவசாயிகளுக்கு உதவுவதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள விவசாய விரிவாக்கச் சேவைகளும் மரபுரீதியான பால்நிலை விதிகளினால் கட்டுண்டுள்ளன. பெண் விவசாயிகளுக்குக் குடும்பப் போஷாக்கு, குடும்ப உணவுப் பாதுகாப்பு, பெண் விவசாயிகள் அமைப்புக்களை உருவாக்கல் தொடர்பான விடயங்களில் பயிற்சி வழங்கப்படுகின்றது. (விவசாயத் திணைக்களம்இ 2014). கமநல சேவை நிலையங்களின் கீழ் பதிவுசெய்துள்ள விவசாயிகள் தொழில்நுட்ப அறிவினையும் பயிற்சியினையும் பெறுவதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், காணி உரிமையாளராக இருப்பது கமநல நிலையங்களில் பதிவுசெய்யப்படுவதற்கான ஒரு முன்தேவைப்பாடாகக் காணப்படுவதுடன் இந்த முன்தேவைப்பாட்டினைப் பெண் விவசாயிகளில் பெரும்பான்மையானோர் நிறைவேற்ற முடியாதவர்களாக உள்ளனர். இது பெண் விவசாயிகள் தொழில்நுட்ப ஆற்றலை விருத்தி செய்துக்கொள்வதில் இருந்தும் அவர்களை மேலும் தூ ரமாக்குகின்றது.

அநுராதபுரத்திலுள்ள பண்ணை இயந்திரங்கள் பயிற்சி நிலையம் மற்றும் விவசாய அமைச்சின் கீழ் வரும் பின் அறுவடைத் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை வழங்கிய பதிவுகளின்படி, 2015 - 2018 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பயிற்றப்பட்ட விவசாயிகளுள் பெண் விவசாயிகள் 10மூ இற்கும் குறைவாகவே உள்ளனர் (குயுழுஇ 2018). பெண் விவசாயிகள் தொழில்நுட்பத்தினை அணுக முடியாது இருப்பதால் அவர்கள் அதிகரித்த உற்பத்தித்திறனினைக் கொண்டிருப்பதும் சந்தைகளுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட அணுகலைக் கொண்டிருப்பதும் பெறுமதிச் சங்கிலியில் செயற்திறன்மிக்க பங்கேற்பினைக் கொண்டிருப்பதும் ஒட்டுமொத்த இழப்புக்களைக் குறைப்பதும் தடுக்கப்படுகின்றது.

### பரிந்துரைகள்

- அனைத்துத் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பெண் விவசாயிகளின் சமமான பங்கேற்பு ஒரு கட்டாயமான தேவைப்பாடாக ஆக்கப்படவேண்டும்.
- ஆண்களின் பணிகள் மற்றும் பெண்களின் பணிகள் பற்றிய அங்கீகரிக்க முடியாத சமூக விதிகள் பற்றி விவசாயிகள் சமுதாயங்களையும் விவசாயப் போதனாசிரியர்களையும் தெளிவுபடுத்தல் (மாற்றீடு - ஆண்களின் பணிகள் மற்றும் பெண்களின் பணிகள் பற்றிய பால்நிலை அடிப்படையிலான சமூக விதிகள் பற்றி விவசாயிகள் சமுதாயங்களையும் விவசாயப் போதனாசிரியர்களையும் தெளிவுபடுத்தல்)
- பெண் விவசாயிகள் பயன்படுத்துவதற்கென இலகுவான தொழில்நுட்பத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- சமுதாய மட்டப் பிரச்சாரங்கள் ∴ செயற்பாடுகள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் தொழில்நுட்பச் சாதுரியமிக்கவர்களாகப் பெண் விவசாயிகளின் அடையாளத்தினை மேம்படுத்தல்.
- விவசாய விரிவாக்கச் சேவைகள் மூலம் பெண் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பினை அதிகரித்தல்.
- உற்பத்தித்திறனினை அதிகரிப்பதற்கும் பெறுமதிச் சங்கிலிகளில் செயற்திறன்மிக்க முறையில் ஈடுபடுவதற்கும் தொழில்நுட்பத்தின் பயன் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பது பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல்.

## 05. பராமரிப்புப் பொறுப்புக்கள்

இலங்கையில் பெண்களின் வேலைவாய்ப்பின்மை வீதங்கள் அனைத்து வயது மட்டங்களினையும் சேர்ந்த ஆண்களின் வேலைவாய்ப்பின்மையினை விட இரண்டு மடங்கு அதிகமானதாகக் காணப்படுகின்றது. பொருளாதார ரீதியாக முனைப்பான பெண்கள் கொடுப்பனவு செலுத்தப்படாத குடும்ப ஊழியத்தினில், குறிப்பாக விவசாயத்தினில் செறிந்துள்ளனர்.(ஆசிய அபிவிருத்தி வங்கிஇ 2015). பெண்களின் உற்பத்தி மற்றும் இனப்பெருக்கப் பொறுப்புக்களைக் கருத்திற்கொள்கையில், குறிப்பாகக் கிராமியப் பெண்கள் அவர்களின் ஆண் சகபாடிகளை விட ஒப்பீட்டளவில் நாளொன்றிற்கு அதிக மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர்.

விவசாயத் துறையினுள் நிலவும் பால்நிலைச் சமத்துவமின்மையினைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இதன் அளவினை அளப்பது கடினமானதாக இருக்கின்றது. கொடுப்பனவு செலுத்தப்படாத பராமரிப்புப் பணிகள் மற்றும் வீட்டு வேலைகளில் பெண்கள் செறிந்துள்ள காரணத்தினால் சீவனோபாய விவசாயத்தில் அவர்களின் வகிபாத்திரம் பொதுவாகக்

கொடுப்பனவு செலுத்தப்படாததாகவே இருக்கின்றது. மேலும் கிராமியப் பொருளாதாரத்திற்கான அவர்களின் பங்களிப்பும் பரந்த அளவில் அறிக்கையிடப்படாததாகவே உள்ளது (சர்வதேச தொழில் அமைப்பு, 2018).

இலங்கையில் கிராமியப் பெண்களுக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள வாய்ப்புக்கள், குறிப்பாக விவசாயப் பெண்களுக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள வாய்ப்புக்கள், இப்பெண்கள் நிறைவேற்றவேண்டும் என எதிர்பார்க்கப்படும் சமூகப் பொறுப்புக்களினால் மட்டுப்படுத்தப்படுகின்றன. விவசாயத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் குறைத்து மதிப்பிடப்படுகின்றது. பொதுவாகப் பெண்களும் அவர்களின் தொடர்புடைய சமுதாயங்களும் சீவனோபாய விவசாயத்தில் வகித்துவரும் முன்னணி வகிபாத்திரத்தினைத் தாண்டி, பயிர்நடல், களையெடுத்தல் மற்றும் அறுவடைசெய்தல் போன்ற அவர்களின் விவசாய வகிபாத்திரங்களைத் தாண்டித் தம்மை விவசாயிகளாக அடையாளப்படுத்துவதில்லை.

## பரிந்துரைகள்

- விவசாயப் பெண்கள் மத்தியில் பராமரிப்புப் பணியினை அங்கீகரித்து அது மீள்பகிர்ந்தளிப்பு செய்யப்படுவதனை மேம்படுத்துவதற்காக அரசாங்கப் பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் அபிவிருத்தி முகவர்களிடையே கொள்கைக் கலந்துரையாடல்களை உருவாக்கல்.
- பெண்களின் உற்பத்தித்திறன்மிக்க பங்களிப்பினையும் இனப்பெருக்க ஊழியப் பங்களிப்பினையும் அங்கீகரிக்கும் அதேவேளை பெண் விவசாயிகளுக்குப் பராமரிப்புப் பொறுப்புக்களின் சுமையினை விகிதாசாரமற்ற முறையில் வழங்குவதில் இருந்தும் தவிர்ந்திருப்பது பற்றிய ஒரு பகிரங்கச் சொல்லாடலை உருவாக்கல்.
- குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் ஆண்கள் அதிகரித்த மட்டத்திலான ஈடுபாட்டினைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம் பற்றி விவசாயச் சமுதாயங்களைத் தெளிவுபடுத்தல்.
- குறைந்தது பயிர்ச் சுற்றின் தெரிவுசெய்யப்பட்ட காலப்பகுதியின் போதாவது பெண் விவசாயிகளை பாரம்பரிய இனப்பெருக்க வகிபாத்திரங்களில் இருந்து விடுவிக்க சமுதாய மட்டத்தில் உதவி முறைமைகளை நிலைநாட்டல்

  உதா: பிள்ளைப் பராமரிப்பு வசதிகள், உணவு விநியோகப் பொறிமுறைகள்.

## கொவிட் இற்குப் பின்னரான உண்மைகளின் பரிசீலிப்பு: பெண் விவசாயிகளின் ஆற்றலை அங்கீகரித்தலும் பொருளாதாரக் கொள்கைகளை மீள்கட்டமைத்தலும்

நெருக்கடி நிலைமையொன்றின் போது மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் சிறார்களுமே. இலங்கையில் வாழும் பெண் விவசாயிகளும் இதற்கு விதிவிலக்கானவர்களல்ல. பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் சமத்துவமின்மைகள் மற்றும் பாகுபாட்டினை கொவிட் கொள்ளை நோய் மிக மோசமானதாக ஆக்கியுள்ளது என்பதைக் களத்தில் இருந்து கிடைக்கும் உண்மைக்கதைகள் தெளிவாக சான்றுப்படுத்துகின்றன. கொவிட் கொள்ளை நோய் ஏற்பட்டதில் இருந்து உள்ளூர் உணவு உற்பத்தி தொடர்பாகவும் பிரதான வாழ்வாதாரங்களுக்கு நகர்வது தொடர்பாகவும் புதிய ஆர்வம் ஏற்பட்டுள்ளது. கொவிட் 19 இன் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவுகள் சீரடைவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதுடன் நாடு அதன் பொருளாதாரத்தினை மீளக் கட்டியெழுப்பவேண்டுமாயின் முன்செல்வதற்கான வழி விவசாயமே என்ற விடயத்தினை நீடுறுதியான அபிவிருத்தியில் இடம்பெறும் சொல்லாடல்கள் அதிகரித்த அளவிற்கு ஆதாரப்படுத்தி வருகின்றன. துணை ஊழியப் படையாக அன்றி பெண் விவசாயிகளாகவும் தொழில்முயற்சியாளர்களாகவும் தலைவர்களாகவும் இந்த முறைமையின் இன்றியமையாத அங்கமாக இருப்பதற்கான ஆற்றலைப் பெண்கள் கொண்டுள்ளனர். இலங்கையில், பெண் விவசாயிகள் அபிவிருத்தியின் பங்காளர்களாக அங்கீகரிக்கப்படவேண்டும். இதனை அடைவதற்கு முதலில் இவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் தீர்க்கப்படவேண்டும்.

கொவிட் 19 ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கையிலும் உலகம் முழுவதிலும் உணவு உற்பத்தியும் உணவு விநியோகமும் ஸ்தம்பிதமடைந்தன. கொள்ளை நோய் பரவுவதைத் தடுப்பதற்காக விதிக்கப்பட்ட ஊரடங்கும் பயணத் தடைகளும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மிக மோசமாகப் பாதித்து நாட்டின் ஒட்டுமொத்த உணவு முறைமை மற்றும் உணவுப் பாதுகாப்பினைப் பாதிப்புறுநிலைக்குத் தள்ளின. நாடு இறக்குமதியில் மிக அதிக அளவு தங்கியிருந்த காரணத்தினால் கொவிட் 19 உணவுப் பற்றாக்குறை அதிகரிப்பதற்கும் காரணமாகியது. கொவிட் 19 இன் பரவல் நாட்டின் உணவு முறைமையில் பாரதூரமான விளைவினை ஏற்படுத்தியதுடன் சூழியல் விவசாய நடைமுறைகளுக்கு மாறுவதற்கான தேவை தற்போது அதிகரித்த அளவில் மிக வெளிப்படையாகத் தெரியவருகின்றது. கடந்த 30 வருடங்களாக நவ தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகளால் பூரணமாகக் கீழறுக்கப்பட்ட சீவனோபாய விவசாயம், உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் சிறு அளவில் பயிர்ச்செய்கை செய்வோருக்கு உதவுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் தற்போது மீள்மதிப்பிடப்பட்டுத் திருத்தப்படவேண்டும்.

1977 இல் திறந்த பொருளாதாரத்தினை ஏற்றுக்கொண்டதில் இருந்து இலங்கையில் உரப் பாவனையில் அதீத அதிகரிப்பு காணப்பட்டு வருகின்றது. இது விவசாயிகள் நீடுறுதியற்ற விவசாய நடைமுறைகளைத் தகவமைக்கவும், பாரம்பரிய அறிவினைக் கைவிடவும், பயிர்ப் பல்வகைமையினைத் தவிர்க்கவும், ஏகவினப் பயிர்ச்செய்கையினைப் பின்பற்றவும், மண் வளம் கெடவும் அல்லது வளமற்றுப் போகவும், சூழியல் இடையூறுகள் ஏற்படவும், காரணம் அறியப்படாத சிறுநீரக நோய் போன்ற நோய்கள் பரவவும் காரணமாகியுள்ளது (ஊமுனுர). ஏகவினப் பயிர்ச்செய்கையின் ஊக்குவிப்பு விவசாய நவீனமயமாக்கத்தினால் ஏற்பட்டதாகும். கொவிட் 19 தாக்கம் தொடர்பாகப் பெண் விவசாயிகளின் மத்தியில் பகிரப்படும் பொதுவான உணர்வுகளுள் விவசாயி ஒருவரின் வீட்டில் உணவுப் பற்றாக்குறைக்கு முகங்கொடுப்பது என்பது தங்களின்

பெற்றோரின் தலைமுறையில் கேள்விப்படாத ஒன்று எனும் உணர்வு முக்கியமானதாகும். ஒரு பயிரை மாத்திரம் வளர்க்கும் விவசாயிகளினால் அதனைத் தமது வீட்டு நுகர்வுக்குப் போதிய உணவு மூலமாகப் பயன்படுத்த முடியவில்லை அல்லது கொவிட் கட்டுப்பாடுகள் காரணமாகச் சந்தையிலும் விற்க முடியவில்லை. அரசாங்க அங்கீகாரம் முதற்கொண்டு, வழங்கப்படும் விரிவாக்கச் சேவைகள் வரை ஏகவினப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் இயலுமாக்கும் சக்திகள் இருக்கின்ற காரணத்தினால் விவசாயிகள் இலங்கையில் ஏகவினப் பயிர்ச்செய்கைக்கு மாறுவது அதிகரித்துள்ளது என்பதைக் களத்தில் இருந்து வரும் கதைகள் காட்டுகின்றன.

இரசாயன உரங்களில் அதிக அளவு தங்கியுள்ள காரணத்தினால் பெண் விவசாயிகள் கொவிட் 19 முழு அடைப்புக் காலப்பகுதியின் போது உற்பத்தியில் ஈடுபடவில்லை. கொவிட் கொள்ளை நோயின் போது உரங்கள் கிடைக்காத காரணத்தினாலும் சந்தை அணுகல் இல்லாத காரணத்தினாலும் உற்பத்திகள் நிறுத்தப்பட்டமையானது பெண் விவசாயிகள் மீது தொடரான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது என்பதை நேர்காணல்களில் இருந்து கண்டறிந்தவைகள் உறுதிப்படுத்துகின்றன. ஏனெனில், இப்பெண் விவசாயிகளின் வகிபாத்திரங்கள் விதைத்தல், அறுவடை மற்றும் நீர் பாய்ச்சுதல் ஆகியவற்றிற்கே பெருமளவிற்கு வரையறுக்கப்பட்டிருந்தமையினால் ஆகும். கொவிட் கொள்ளை நோய் வருமானப் பிறப்பாக்கத்திற்கான வழிகளை மாத்திரம் தடைசெய்யாமல் கொவிட்டுக்குப் பின்னரான சூழமைவில் பெண் விவசாய ஊழியர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்களிலும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும் எனப் பெண் விவசாயிகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றனர். இதற்கான காரணம் கொவிட் 19 ஏற்பட்டதைத் தொடர்ந்து தமது தொழில்களை இழந்த பெருமளவான பெண் ஆடைத் தொழிலாளர்கள் சடுதியாக நகர்ப்புறங்களில் இருந்து கிராமங்களுக்குப் புலம்பெயர்ந்த காரணத்தினால் மலிவான ஊழியம் அதிக அளவில் கிடைக்கின்றமையாகும்.

தேசிய விவசாய, பொருளாதார மற்றும் கிராமிய அபிவிருத்திக் கொள்கைகளில் பால்நிலை பொரும்போக்காக்கப்படுவது இன்றியமையாததாகும். பெண் விவசாயிகளின் பயன்படுத்தப்படாத ஆற்றல்கள் தொடர்பாகவும் நாட்டின் சீர்குலைந்துள்ள உணவு முறைமையினைச் சீரமைப்பதற்கு அவர்களை இன்றியமையாத அங்கமாக அங்கீகரிப்பதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் ஒரு பகிரங்க மற்றும் கொள்கைச் சொல்லாடல் உருவாக்கப்படவேண்டும். இலங்கையில் பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ள தடைகளை இல்லாதொழிப்பதற்காக அரசாங்கத்தினைப் பதிற்செயற்பாடாற்ற வைத்து மிகவும் வினைத்திறனுடன் பரிகார நடவடிக்கைகளை வழங்குவதற்காகக் குறிப்பாகப் பெண் விவசாயிகள் தொடர்பான பால்நிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி கொள்கை வகுப்போரினதும் அரசாங்க உத்தியோகத்தர்களினதும் ஆற்றல்கள் அதிகரிக்கப்படவேண்டும்.

ஆண் விவசாயிகளுக்கு வழங்கப்படும் அதே வாய்ப்புக்களும் வளங்கலுக்கான அணுகலும் பெண் விவசாயி ஒருவருக்கு வழங்கப்பட்டால் முடிவாகக் கிடைக்கும் ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் மிக உயர்ந்ததாக இருக்கும் என்பதை நிரூபிப்பதற்குப் போதிய உலகளாவிய சான்றுகள் உள்ளன. விவசாயத் துறைக்கும் உணவு உற்பத்திக்கும் பெண் விவசாயிகள் வழங்கும் பங்களிப்பினைக் குறைவாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினாலும் அப்பங்களிப்பினைக் கீழறுப்பதன் காரணத்தினாலும் இழக்கப்படும் உற்பத்தித்திறனும் சாத்தியமான வருமான இழப்பும் மதிப்பிடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட கணக்கீட்டின் அளக்கக்கூடிய பெறுபேறுகளை இலங்கையில் பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் பிரதான தடைகளைத் தீர்ப்பதற்குத் தேசிய மட்டக் கொள்கை வகுப்பாளர்கள் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க நிர்ப்பந்திப்பதற்கான கருவியாகப் பயன்படுத்த முடியும்.

# உசாவல்கள்


விவசாயம் மற்றும் சுற்றாடல் புள்ளிவிபரப் பிரிவு. (2002). *விவசாயத் தொகைமதிப்பு. தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம். https://www.statistics.gov.lk/agriculture/index.htm*

ஆசிய அபிவிருத்தி வங்கி. (2015). நாட்டுப் பால்நிலை மதிப்பீடு இலங்கை ஒரு இற்றைப்படுத்தல் ஆசிய அபிவிருத்தி வங்கி *6 ADB Avenue, Mandaluyong City 1550 Metro Manila, Philippines www.adb.org Country Gender Assessment Sri La. https://www.adb.org/sites/default/files/institutional-document/172710/sri-lanka-country-gender-assessment-update.pdf*

விவசாயத் திணைக்களம் (2014). பெண்களின் விவசாய விரிவாக்கச் சேவை. அரசாங்கத் தகவல் நிலையம். *http://www.gic.gov.lk/gic/index.php/en/component/info/?id=2239&task=info*

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம். (01.01.20/30.03.20). Sri Lanka Labour Force Participation Quarterly Bulletin [Sri Lanka Labour Force Survey 1st Quarter - 2020]. *http://www.statistics.gov.lk/Resource/en/LabourForce/Bulletins/LFS_Q1_Bulletin_2020*

சர்வதேச தொழில் அமைப்பு. (2018). *Rural Women at Work: Bridging the Gaps. https://www.ilo.org/wcmsp5/groups/public/---ed_protect/---protrav/---ilo_aids/documents/publication/wcms_619691.pdf*

உணவு மற்றும் விவசாய அமைப்பு. (2000). *Women Feed the World. http://www.fao.org/3/x0262e/x0262e16.htm#:~:text=ON%20A%20GLOBAL%20SCALE%2C%20women,the%20labour%20for%20rice%20cultivation.*

உணவு மற்றும் விவசாய அமைப்பு. (2011). *Policy Roundtable: Gender, Food Security and Nutrition. http://www.fao.org/3/mc065E/mc065E.pdf*

உணவு மற்றும் விவசாய அமைப்பு. (2018). *Country Gender Assessment of the Agriculture and Rural Sector in Sri Lanka. http://www.fao.org/3/CA1516EN/ca1516en.pdf*

உணவு மற்றும் விவசாய அமைப்பு. (2020). *The female face of farming. http://www.fao.org/gender/resources/infographics/the-female-face-of-farming/en/*

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (2016). *Compendium of rural women's technologies and innovations. https://www.ifad.org/documents/38714170/41246737/Compendium_Innovations_web.pdf/2ac139d1-5804-4212-bcf6-063587369db4*

மொனாஸ் பல்கலைக்கழகம் ரூ ஒக்ஸ்பாம் அவுஸ்திரேலியா. (2018). *RURAL WOMEN'S PARTICIPATION AND RECOGNITION IN SUSTAINABLE AGRICULTURAL LIVELIHOODS ACROSS THEIR LIFE-COURSE, IN POST-WAR SRI LANKA. https://www.monash.edu/__data/assets/pdf_file/0005/1779080/Rural-Sri-Lankan-women-in-agriculture-Exec-Summary.pdf*

ஒக்ஸ்பாம். (2017, October). பெண் விவசாயிகளுக்கு நிதியளித்தல்: *The need to increase and redirect agriculture and climate adaptation resources. https://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/bp-financing-women-farmers-131017-en.pdf*

Solotaroff, J. L., Joseph, G., & Kuriakose, A. (2018). *Getting to Work: Unlocking Women's Potential in Sri Lanka's Labor Force (Directions in Development). World Bank Publications.*

WOCAN, FAO, & UNDP. (2013). *Women's Inclusion in REDD+ in Sri Lanka Lessons from Good Practices in Forest, Agriculture and Other Natural Resources Management Sectors. UN-REDD.*



சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப்பொறுப்பின் கூட்டணி
இல. 03, கின்சி டெரஸ், கொழும்பு 08, இலங்கை
Tel: + 94 (0) 112684845 Fax: +94 (0) 112686843
admin@lstlanka.org
www.lstlanka.org


LAW & SOCIETY TRUST

WE EFFECT


பொறுப்பு துறுப்பு: இவ் ஆவணத்திற்கான நிதி அனுசரணை முழுமையாக.'.பகுதியளவில் ஸ்வீடிஷ் சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபன முகவராண்மையினால் (Sida) மற்றும் We Effect இனால் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இதில் கூறப்பட்டுள்ள அபிப்பிராயங்களுடன் Sida மற்றும் We Effect உடன்படுகின்றன என்பதாக எவ்விதத்திலும் கருதப்படலாகாது.